# பா.ஜ.க.வின் இழிவான அரசியல் இந்தியாவை அழிக்கும்!

## 'தீக்கதிர்' தலையங்கத்தில் எச்சரிக்கை!

சென்னை, டிச. 22 -

பா.ஜ.க. அரசு மற்றும் பிரதமர் மோடியின் இழிவான நடவடிக்கை முறை இந்தி யாவை அழிவுப் பாதைக்குத் தான் இட்டுச் செல்லும் என்று நாடாளுமன்ற நடவடிக்கை குறித்து 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

அது வருமாறு:

சட்டமேதை அம்பேத்கரை இழி வுபடுத்திய அமித் ஷாவுக்கு எதிராக வும், பாஜக அரசுக்கு எதிராகவும் இப்படி ஒரு எதிர்ப்பு எழும் என்று அக்கட்சி எதிர்பார்க்கவில்லை. இன்று மாட்டிக் கொண்டவுடன் பிரச் சினையை திசை திருப்ப புதிய நாட கத்தை அரங்கேற்றியுள்ளனர். அதற்கு அக் கட்சி தேர்வுசெய்துள்ள இடம் நாடாளுமன்ற வளாகம்.

பொதுவாக நாடாளுமன்ற வளா கத்தில் எதிர்க் கட்சிகள் போராட்டம் நடத்துவது வழக்கம். இது காலம் காலமாக நடந்து வருகிறது. இது வரை கைகலப்பு நடந்தது இல்லை. காரணம், யாருக்கும் இடையூறு ஏற்படுத்தாமல் போராட்டம் நடைபெறும்.

ஆனால் வியாழக்கிழமை எதிர் கட்சி யினர் போராட்டம் நடத்திய பின்னர் அவைக்குச் செல்ல முயன் றனர். நாடாளுமன்றத்தில் பிரதான நுழைவாயில் முன்பு ஆளும் பாஜக வினர் திட்ட மிட்டு போட்டி ஆர்ப்பாட் டம் நடத்தினர். அதுவும் நுழைவா யிலை மறித்து நடத்தினர்; மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி மற்றும் அக்கட்சியின் இதர உறுப்பினர்கள் உள்ளே சென் றபோது அவர்கள் வழிவிட்டிருக்க


தீக்கதிர்
2024 டிச.21 சனிக்கிழமை
மலிவான – இழிவான அரசியல்
சட்டமேதை அம்பேத்கரை இழிவுபடுத்திய அமித் ஷாவுக்கு எதிராகவும், பாஜக அரசுக்கு எதிராகவும் இப்படி ஒரு எதிர்ப்பு எழும் என்று அக்கட்சி எதிர்பார்க்கவில்லை. இன்று மாட்டிக் கொண்டவுடன் பிரச்சனையை திசைதிருப்ப புதிய நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர். அதற்கு அக் கட்சி தேர்வுசெய்துள்ள இடம் நாடாளுமன்ற வளாகம்.
பொதுவாக நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க் கட்சிகள் போராட்டம் நடத்துவது வழக்கம். இது காலம் காலமாக நடந்து வருகிறது. இதுவரை கைகலப்பு நடந்தது இல்லை. காரணம், யாருக்கும் இடையூறு ஏற்படுத்தாமல் போராட்டம் நடை பெறும். ஆனால் வியாழக்கிழமை எதிர்கட்சி யினர் போராட்டம் நடத்திய பின்னர் அவைக்குச்

வேண்டும். வழிவிடாமல் அவரை தள்ளிவிட் டுள்ளனர்.

இதை மறைத்து, ராகுல்காந்தி தள்ளிவிட்ட தால்தான் பாஜக உறுப் பினர் சாரங்கி தலையில் காயம டைந்தார் என்று பொய் பேசுகிறார் கள். அம்பேத்கர் விஷயத்தில் நாடு முழுவதும் எழுந்த கண்டனத்தை எதிர்கொள்ள முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் பாஜக, திட்டமிட்டு இந்த நாட கத்தை நடத்தியுள்ளது வெளிப்படையாக தெரி கிறது. பாஜக மூத்த உறுப்பினரை ராகுல் தள்ளி விட்டிருந்தால் அது அங்குள்ள கண் காணிப்பு கேமிராவில் பதிவாகியி ருக்கும். அதை வெளி யிட நாடாளு மன்றச் செயலகம் மறுக்கிறது.

ஒருவேளை ராகுல்காந்தி தள்ளி யதைப் போன்று காட்சிகளை டிபேக் தொழில் நுட்பத்தில் போலியாக உருவாக்க முயற்சிக்கிறார்களோ என்னவோ? நாடாளுமன்றத்தை கலவர மன்ற மாக மாற்ற பா.ஜ.க.வினர் முயற்சிக்கிறார்கள். ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜிஜு வின் சமூக வலைதளப் பதிவு அதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. எதிர்க்கட்சித் தலைவர், பாஜக பெண் உறுப்பினர்களிடம் முறை கேடாக நடந்து கொண்டார் என்று அபாண்டமான குற்றச் சாட்டை அவர் கூறியி ருப்பதோடு பதிலுக்கு பதில் அடித்திருந்தால் என்னவாகியி ருக்கும் என்றும் வன்முறையைத் தூண்டியுள்ளார். மக்களவைத் தேர் தலில் அறுதி பெரும்பான்மையை பெறமுடி யாத நிலைக்கு சென்ற பாஜகவுக்கு வலுவான எதிர்க்கட்சிக ளால் அச்சம் ஏற்பட்டுள்ளது. இத னால் பொய்யான குற்றச்சாட்டு களின் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் மீது வழக்குப் பதிவு செய்து சிறை யில் தள்ளி அவரது செயல்பாடு களை முடக்க முயற்சிக்கிறது.

வலுவான ஜனநாயகத்திற்கு அரசும் எதிர்க் கட்சிகளும் அவசியம் என்பதைக் கூட ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை அவர்கள் பெற வில்லை. பாஜகவின் இத்தகைய இழிவான அரசியல் நடைமுறை, இந்தியாவை அழிவுப்பாதைக்கு தான் இட்டுச் செல்லும்.

இவ்வாறு 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

---

### அரிமா சு.சேகர், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா முன்னிலை! ஆர்.கே. ராகுல்குமார் தலைமையில்

# 177 'அ' வட்டக் கழக இளைஞரணி சார்பில் பொதுக்கூட்டம்! நல உதவிகள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன்,ஆம்பூர் பொய்யாமொழி, இளம் பேச்சாளர் ஷேக் அலிமாஸ் அலி சிறப்புரை!

சென்னை டிச.22-

சென்னை தெற்கு மாவட் டம்,வேளச்சேரி மேற்கு பகுதி, 177 "அ" வட்ட இளைஞர் அணி சார்பில் கழக இளைஞ ரணி செயலாளர்,தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தெரு முனை கூட்டம் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நாளை (23.12.2024 திங்கள் கிழமை) மாலை 6:00 மணிக்கு தண்டீஸ்வரம் மெயின் ரோடு தண்டீஸ்வரம் நகர் லதா சூப்பர் மார்க்கெட் அருகில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு 177"அ " வட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.கே. ராகுல்குமார் தலைமை வகிக்கிறார்.

பகுதி கழகச் செயலாளர் அரிமா சு.சேகர்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம். எல்.ஏ,தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பெ. மணிமாறன் எம்.சி, மாவட்ட பொருளாளர் வேளச்சேரி எஸ். பாஸ்கரன் எம்.சி, விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் வேளச்சேரி வே. ஆனந்தம் எம்.சி, மகேஸ் வரி முருகவேல் எம்.சி,நெசவா ளர் அணி மாவட்ட அமைப்பா ளர் கழக த.ரமேஷ்,மாவட்ட இளைஞரணி துணை அமைப் பாளர் எம். விநாயகமூர்த்தி, வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் த.ஜெகதீசன் ஆகியோரின் முன்னிலை வகிக் கின்றனர்.

177"அ " வட்டக் கழகச் செயலாளர் ஜி.பி.எஸ். பாலச தீஷ்,177 வது வட்டக் கழக செய லாளர் பொ.த.மதிவாணன், எம். ஏ.சங்கர்,வி. பார்த்தசா ரதி,சி. முருகன்,ஜி.நடராஜன், அ.நீலகண்டன்,கோ. சிவக்கு மார்,இரா. ஏழுமலை,பி. சேச் சம்மாள்,நா. கண்ணன்,கோ. ஸ்ரீனிவாசன்,சி.பத்தா, பா. ஸ்ரீனிவாசன்,வே. கருணை அழகன் ஆகியோர் வரவேற்பு ரையாற்றுகின்றனர்.

கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமை கழக பேச்சாளர் ஆம்பூர் பொய்யாமொழி,இளம் பேச் சாளர் ஷேக் அலிமாஸ் அலி, முனைவர் தமிழச்சி தங்கபாண் டியன் எம்.பி, சென்னை பெருந கர மாநகராட்சி துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார், அசன் மௌலானா எம்.எல்.ஏ. ஆகி யோர்சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்த நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ், வேளச்சேரி சாய், ஜெயகாந் தன்,எச். வெங்கடேஷ்,ஆர். பாலசுந்தரம்,பகுதி கழக நிர்வா கிகள் சி.பழனி, பொ.த. எழில் வாணன், நா.டில்லிகுமார்,சே. மைதிலி,

வேளச்சேரி மேற்கு பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள்; த. பார்த்திபன்,கே.என். தாமோ தரன், எஸ். முருகவேல்,தே.கோபி, க.பாரதிதாசன்,வி. சக்திவேல்,

மாவட்ட பிரதிநிதிகள் என். நேசன்,ஜெ. பவளவண் ணன்,ஆர். நாகராஜ்,வி. கோபா லகிருஷ்ணன், வி.ஜி.மோகன்,க. பாலாஜி,ஆ.வடிவேலன், ஏ.வி. ரங்கா,ஜெ.சீதாபதி,கே.ஆர்.பி. பாண்டியன், சி.சூர்யா, மணி வண்ணன்,மேற்கு பகுதி இளை ஞரணி நிர்வாகிகள் எம்.எஸ். விஸ்வா,வி. சண்முகநாதன் மற் றும் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர் கள் கழகத்தின் மூத்த முன் னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

177 'அ' வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கள் அருண்,நடராஜன், ஜெனீத் குமார்,ஆர். சந்திர மௌலி, ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர்.

---

### ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. நிகழ்ச்சி ஏற்பாட்டில்! விருகம்பாக்கம் தொகுதியில் கிறிஸ்துமஸ் திருவிழா!

# 2500 நபர்களுக்கு பரிசுத் தொகுப்பு: அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - எஸ்.ஜோயல் பங்கேற்பு! மு.ராசா - கே.கண்ணன் முன்னிலை!

சென்னை, டிச. 22

சென்னை தெற்கு மாவட் டம், கலைஞர்நகர் வடக்குப் பகுதி, 127 வது வட்டம், கோயம்பேடு, திருவீதி அம்மன் கோவில் தெருவில் இன்று (22.12.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணிக்கு, 2500 நபர்க ளுக்கு, புனித கிறிஸ்துமஸ் தொகுப்பு வழங்கும் விழா விருகம் பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிர மணியன் கலந்து கொண்டு 2000 நபர்களுக்கு பரிசுத் தொகுப்பு வழங்கி சிறப்பிக்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர் கள் மு.ராசா எம்.சி, கே.கண் ணன் எம்.சி. ஆகியோர் முன் னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண் டியன், சட்டமன்ற உறுப்பினர் கள் ச.அரவிந்த் ரமேஷ், காரம் பாக்கம் க.கணபதி, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தன சேகரன் எம்.சி, மாநில இளை ஞரணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல், சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்து மாணிக்கம், மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ண மூர்த்தி, தொகுதிப் பார்வையா ளர் வே.உமாகாந்த், மாமன்ற உறுப்பினர் வட்டக் கழகச் செய லாளர் பொன் வர.லோகு, வட் டக் கழகச் செயலாளர்கள் எஸ். மைக்கேல், மு.கோவிந்தராஜன், வீ.ஏ.ராஜா, பழக்கடை பாஸ் கர், தஞ்சை பாபு, பூக்கடை பழ னிச்சாமி, இரா.சொழியன், பி. கே.குமார், அ.கதிரேசன், சதிஷ் கண்ணன், சோ.சொந்தில்குமார், மு.அன்பழகன், மாமன்ற உறுப் பினர் ரத்னா லோகேஸ்வரன், நிளவரசி துரைராஜ், மாவட்ட அமைப்பாளர்கள் சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம். விநாயகமூர்த்தி, சங்கர் கணேஷ், ஆர்.கிருஷ்ணாகுமார், ஜெ.இ.பாண்டியன், ராமாபுரம் ரவி, கா.வீ.தியாகராஜன், கோட் டூர் எஸ்.பிரகாஷ், பகுதி கழக நிர்வாகிகள் ச.நாகராஜ், விஜய குமார், விஜயலட்சுமி, து.ரஞ் சித் குமார், உமாபதி, அஜந்தா ரவி, தியாகு, பாபு, மாவட்டப் பிரதிநிதிகள் ஜெயக்குமார், ஆர். டி.நல்லேந்திரன் பாலமுருகன், ராமச்சந்திரன், சுப்பிரமணி, பட் டாபி, ரேவதி முருகேசன், உள் ளிட்டோர் பங்கேற்று சிறப் பிக்க உள்ளனர்.

---

### பெருங்குடி எஸ்.வி ரவிச்சந்திரன் முன்னிலை! ஆர். குமாரசுவாமி தலைமை!

# 186 வது வட்டத்தில் உதயநிதி பிறந்த நாள் பொதுக்கூட்டம்! 1000 பேருக்கு நல உதவிகள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் – பொன்னுசாமி – கதிரவன் – ச.அரவிந்த் ரமேஷ் சிறப்புரை!

சென்னை, டிச. 22 -

சென்னை தெற்கு மாவட் டம், சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி 186 ஆவது வட்டத்தில் ஆர் குமாரசாமி தலைமையில் பகுதி செயலாளர் எஸ்.வி.ரவிச் சந்திரன் எம் சி முன்னிலையில் உதயநிதியின் உதய நாளை முன் னிட்டு இன்று மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது. சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி 186 அ"வது வட்ட திமுக சார் பில் தமிழகத்தின் துணை முதல் வர் கழக இளைஞரணி செயலா ளர் உதயநிதியின் உதய நாள் விழாவை முன்னிட்டு புழுதி வாக்கம் வில்லேஜ் ரோடு ஈஸ்வ ரன் கோவில் தெருவில் இன்று ( 22-12 -2024 -ஞாயிறு) மாலை 5 மணியளவில் வட்ட கழக செய லாளர் ஆர்.குமாரசாமி தலை மையிலும் சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழக செயலாளர் 14 வது மண்டல குழு தலைவரு மான எஸ். வி.ரவிச்சந்திரன் முன் னிலையில் நடைபெறுகிறது.

ஜே கே மணிகண்டன், தே ஜம்புலிங்கம், ஈ லட்சுமணன், ஆர் ஜனார்த்தனன், வி. வெங்க டேசன், எம் லீலாவதி, எம் அர சழகன், எஸ் ஜெய் சிங், எ ரவி எஸ் கோடீஸ்வரன், எஸ் வசு மதி, எஸ் வாணிஸ்ரீ, ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் அமைச்சர் மா சுப்பி ரமணியன் ஏர்போர்ட் பொன் னுசாமி ஞா.கதிரவன் முனை வர் தமிழச்சி தங்கபாண்டியன் லயன்ஸ் அரவிந்த ரமேஷ் ஆகி யோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் காரம்பாக் கம் கா கணபதி எம்.எல்.ஏ., மாவட்ட இளைஞரணி அமைப் பாளர் எம் பி பிரபாகரராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ் குமார், சோழிங்கநல் லூர் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் நா. சந்திரபாபு, , பால வாக்கம் மு.மனோகரன், தலைமை செயற்குழு உறுப்பி னர் சோமு, பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம் சி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம் கே ஏழுமலை, ஆ.அரிகிருஷ் ணன், , மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கா.வி தியாகராஜன், மாவட்ட இலக் கிய அணி அமைப்பாளர் எம் . பார்த்திபன், மாவட்ட மாண வர் அணி அமைப்பாளர் பா. அருண்குமார்,

சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர் எம் பி ஹரி கிருஷ்ணன்,வி வெங்கடேசன், சே சிந்தன், ஆர் திலகவதி ,கா ரவீந்திர குமார், எம் டேவிட் சௌந்தர்ராஜன் ,ஆ தேவரா ஜன் ,எம் கே ஜெய் ,திவாகர், ஜி சுரேஷ் மா ஆறுமுகம் வி ரஞ்சித் குமார் மற்றும் மாமன்ற உறுப் பினர்கள் ஷர்லி தாமஸ்ஜெய், ஷர்மிளா தேவிதிவாகர் சமினா செல்வம், மாவட்ட கழகப் பிர திநிதிகள் தே .ஜம்புலிங்கம் கே பாலகிருஷ்ணன் ,இரா ராஜேஷ் குமார் எஸ் கோவிந்தன் எம் கே ராமகிருஷ்ணன் ஏ விநாயகம் சன்கருணாநிதி மாவட்ட அணைகளின் துணை அமைப் பாளர்கள் கே .செந்தில் மூ தமிழ்ச்செல்வன் பகுதி அணிக ளின் அமைப்பாளர்கள் ம.ஸ்ரீகாந்த் கெஜலட்சுமி ஆர் கார்த்திக் முருகன் பகுதி அணிக ளின் துணை அமைப்பாளர்கள் வட்ட கழக மகளிர் அணி சார்ந் தவர்கள் வட்ட கழக செயல்வீ ரர்கள் பாக முகவர்கள் மற்றும் இறுதியாக ஜெ.மகேஸ்வரன் நன்றி கூறுகிறார்.

---


சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு! இன்று (22-12-2024) நடைபெறும் பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு!



மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

| வ. எண் | வட்டம் | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 113ஆ | எம்.என். விஷ்ணு வட்டக் கழக செயலாளர் | இராமகாமத்து புரம் தி.நகர் சென்னை – 600 017 | ஆடுத்துறை உத்திராபதி தலைமைக் கழக பேச்சாளர் பூபதி தலைமைக் கழக இளம் பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு / பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்/தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே. சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.




தாம்பரம் மாநகராட்சி பெருங்களத்தூர் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் நாடாளுமன்றத்தில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவு படுத்திப் பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்தும் அம்பேத்கர் சிலை அருகில் பெருங்களத்தூர் தெற்கு பகுதிக் கழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி தி.மு.க. குழு தலைவர் எஸ்.சேகர் தலைமையில் பி.புகழேந்தி எம்.சி., லயன் ஆர்.எஸ்.சங்கர், வட்டச் செயலாளர்கள் எஸ்.ஐசக், பி.சுரேஷ், கே.வெங்கடேசன், ஆர்.மஞ்சுநாதன், க.குருநாதன், டி.கே.கோட்டி, கே.சுந்தர் ஆகியோர் முன்னிலையில் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கலந்து கொண்டு டாக்டர் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினார். இதில் பகுதி கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

### மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் முன்னிலை

# மதுரவாயல் 147 வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, டிச. 22 -

மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் விடுத் துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட் டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்டம் சார் பில் தமிழக துணை முதல்வர், கழக இளைஞரணி செயலா ளர் உதயநிதி ஸ்டாலின் அவர் களின் பிறந்தநாள் விழா தெரு முனைக் கூட்டம் சம்பந்தமாக வட்டக் கழகப் பொது உறுப் பினர்கள் கூட்டம் இன்று (22.12.2024 ஞாயிற்று கிழமை ) மாலை 5.30 மணி அளவில் ஆலப்பாக்கம் 147 வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவல கம் அருகில் வட்ட அவைத் தலைவர் வெங்கடேச பெரு மாள் அவர்கள் தலைமையில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், சென்னை மாநகராட்சி, கல்விக்குழு உறுப்பினர் ரமணி மாதவன் முன்னிலையில் நடைபெறுகி றது.

ஆகவே வட்டத்திற்குட் பட்ட மாவட்டக் கழக, பகு திக் கழக, வட்டக் கழக நிர்வா கிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகி கள், கழகத் தோழர்கள், கழக முன்னோடி கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட் டுக்கொள்கிறேன்.

**பொருள் :**

கழக ஆக்கப் பணிகள், மற் றும் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்க ளின் பிறந்தநாள் விழா குறித்து.

இவ்வாறு மேனாள் கவுன் சிலர், 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள் ளார்.

---

# திராவிட மாடல் முதல்வர்தான் எட்டாம் வள்ளல்!



மாமன்னர் ஸ்டாலின் இங்கு ஆட்சி செய்கிறார்
தமிழ்நாட்டு மக்களுக்கு விடியல் தருகிறார்
மன்னராட்சி இல்லை ! இது மாமன்னர் ஆட்சி
செந்தமிழன் ஸ்டாலின் ஆட்சி என்று சொல்லுவோம் !

குடிசைவீட்டில் கும்பிகாய்ந்து கிடந்த மக்களைக்
காரைவீட்டில் குடியேற வைப்பவர் யாரு?
கஞ்சித்தண்ணி குடிப்பதற்கே வழியில்லாதோர்க்கும்
மூணுவேளை அரிசிச்சோறு தருபவர் யாரு?

தொலைவில் நின்று கோபுரத்தைக் கும்பிட்டோரை
அர்ச்சகராய்க் கோயிலுக்குள் அழைப்பவர் யாரு?
சாதிஇல்லா சமதர்மக் குடியிருப்பென்று
சமத்துவபுரம் சமூகநீதி காப்பவர் யாரு?

ஆம்புலன்ஸ் சேவைகளை இலவசம்ஆக்கி
எளியோரின் பதைபதைப்பைக் குறைப்பவர்யாரு
இன்னுயிரைக் காப்போம்என உயிர்காக்கின்ற
மருத்துவக்காப் பீடுதிட்டம் கொடுப்பவர்யாரு

மாற்றுத் திறனாளிக்கும் இடஒதுக்கீடு
திருநங்கைப் பெண்களுக்கும் இடஒதுக்கீடு
தமிழ்வழியில் படித்தோர்க்கும் இடஒதுக்கீடு
இல்லந்தேடிக் கல்விஅள்ளிக் கொடுப்பவர்யாரு?

அடுப்படியில் முடங்கிய நம்தாய்மார்க் கெல்லாம்
பேருந்து விடியல் பயணம் தருபவர்யாரு?
அஞ்சும் பத்தும் இல்லாத மகளிர் கணக்கிலே
ஆயிரமாம் உரிமைத் தொகை விடுப்பவர்யாரு?

விதவைஎன்று கண்ணீர்விட்ட பெண்களுக் கெல்லாம்
முன்னேற்றத் திட்டங்கள் கொடுப்பவர் யாரு?
மகளிர்சுய உதவிக்குழு அரியணையோடு
வருமானச் செங்கோலும் தருபவர் யாரு?

இருமொழிதான் நமதுகொள்கை என்று போராடித்
தமிழர்களை உலகில் வெல்ல வைப்பவர் யாரு?
பொட்டைப்புள்ள ஆனாலும் குடும்பச் சொத்திலே
சொத்துரிமை உண்டுஎன்று சொல்பவர் யாரு?

புதுமைப்பெண் தமிழ்ப்புதல்வன் தோழிவிடுதி
தொழில் முனைவோர் மானியங்கள் கலைஞர் நூலகம்
கோயில்களில் குடமுழுக்கு சமச்சீர் கல்வி
உழவர்சந்தை சாதனைகள் செய்பவர் யாரு?

சேரசோழ பாண்டியரின் ஆட்சி என்று
வரலாறு படித்ததுண்டு திராவிட மாடல்
முதல்வர்ஆட்சி மாமன்னர் ஆட்சி என்போம்
எல்லோர்க்கும் எல்லாம்தரும் மாட்சி என்போம்

தமிழ்ஏழு வள்ளல்கதை இலக்கியம் சொல்லும்
திராவிட முதல்வர்தான் எட்டாம் வள்ளல்
மாமன்னர் ஸ்டாலின் ஆட்சி என்றும் வெல்லும்
எப்போதும் தி.மு.க.தான் உலகை ஆளும்!



**கவிஞர் திருமதி. ஆண்டாள் பிரியதர்ஷினி**
தி.மு.க. தலைமைக் கழக செய்தித் தொடர்பு துணைத் தலைவர்

---



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனைப்படி மாமல்லபுரம் நகர தி.மு.க. சார்பில் நாடாளுமன்றத்தில் புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களை இழிவாகப் பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்தும் 21.12.2024 அன்று காலை 9 மணி அளவில் பேரூராட்சி மன்ற அலுவலகம் முன்பு மாவட்ட பிரதிநிதி உ.முருகன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாமல்லபுரம் நகர கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## டி.டி. தணிகாசலம்
## டிசம்பர் 22 (2009)



குன்றத்தூரில் கழகம் வளரப் பாடுபட்ட செயல்வீரர்களில் இவரும் ஒருவர்.

1950ஆம் ஆண்டு காங்கிரஸ் அரசு விதித்த 144 தடை உத்தரவை மீறி பேச்சுரிமை, எழுத்துரிமை காக்க கூட்டம் நடத்தியதையொட்டி காவல்துறை இவரைக் கைது செய்தது.

கழகம் அறிவித்த இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்த்து போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**